I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
<u>M.C.O.P.NO.653/2019</u>

| | | |
|---|---|---|
| Name | : | Shoba |
| Husband Name | : | Haridass |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.09.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 03.25 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை கேள்விப்பட்டு தான் தெரிந்து கொண்டேன். விபத்து சமயத்தில் என் கணவர் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். அவர் ஓட்டி சென்ற இருச்சக்கர வாகனத்தின் ஆவணத்தையோ அவரது ஓட்டுனர் உரிமத்தையோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் என் கணவர் ஓட்டி சென்ற இருச்சக்கர வாகனத்திற்கு ஆவணங்கள் செல்லத்தக்க நிலையில் இல்லை என்றும் அவருக்கு ஓட்டுனர் உரிமம் ஏதும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் வந்த இருச்சக்கர வாகனமும் எதிரில் வந்த இருச்சக்கர வாகனமும் எதிர் எதிரில் மோதி கொண்டது என்றால் சரிதான். என் கணவர் தான் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், தாறுமாறாகவும், தவறான திசையில் ஓட்டி சென்று இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அதை மறைப்பதற்காகவே மாதிரி வரைபடத்தை

நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

என் கணவருக்கு தலை உட்பட எல்லா இடங்களிலும் காயம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். என் கணவர் தலைகவசம் எப்போதும் அணிந்துதான் செல்வார். என் கணவர் சம்பவ சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள என் கணவரின் வேலை மற்றும் வருமானம் குறித்து ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

இந்த விபத்தில் என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது தான் முழு அஜாக்கிரதை என்பதால் இந்த மனு இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் அதிகபடியான இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் : 03.30 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.09.18 17:20:02 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.